# சங்கரானந்தம்-18

## 13.06.2022





காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்

தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்
104, அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.
99404 47 437



அத்வைத குருவின் அதிகாலை விஸ்வரூப தரிஸனம்

## சங்கரானந்தம் - 18 நாள் : 13.06.2022



நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும், வணங்கி உற்சவ மூர்த்தியாக நம் கண் முன்னே உலவி அருள் பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் அகம் குளிர வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹா ஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹா ஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.**

திருமதி. தனுஜா சங்கர் S.கைலாஷ்

## மஹாஸ்வாமிகளின் பேரருளால் ஜெயந்தி மற்றும் ஆராதனை நாளில் இதுவரை வெளிவந்துள்ள பாடல் தொகுப்புகள்

| | |
|---|---|
| ௐ சங்கரானந்தம் - 01 | வெளியான நாள் : 29.12.2013 |
| ௐ சங்கரானந்தம் - 02 | வெளியான நாள் : 12.06.2014 |
| ௐ சங்கரானந்தம் - 03 | வெளியான நாள் : 18.12.2014 |
| ௐ சங்கரானந்தம் - 04 | வெளியான நாள் : 10.06.2015 |
| ௐ சங்கரானந்தம் - 05 | வெளியான நாள் : 06.01.2016 |
| ௐ சங்கரானந்தம் - 06 | வெளியான நாள் : 22.05.2016 |
| ௐ சங்கரானந்தம் - 07 | வெளியான நாள் : 25.12.2016 |
| ௐ சங்கரானந்தம் - 08 | வெளியான நாள் : 08.06.2017 |
| ௐ சங்கரானந்தம் - 09 | வெளியான நாள் : 14.12.2017 |
| ௐ சங்கரானந்தம் - 10 | வெளியான நாள் : 29.05.2018 |
| ௐ சங்கரானந்தம் - 11 | வெளியான நாள் : 02.01.2019 |
| ௐ சங்கரானந்தம் - 12 | வெளியான நாள் : 19.05.2019 |

**சங்கரானந்த கானங்களை**
**www.soundcloud.com / madambakkamshanks**
மற்றும்
**www.soundcloud.com/lakshmikanthan-shankar**
ஆகிய வலைதளங்களில் கேட்டு மகிழலாம்

விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தைக் கொண்ட இப்புத்தகங்கள் மஹா ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இலவசமாக தொடர்ந்து வழங்கிட தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி குருவருள் பெறுவீர்.

குறைந்த பட்சம் ரூ.108/- அளிப்பவர்களுக்கு அடுத்தடுத்த வெளியீடுகள் அனுப்பிவைக்கப்படும். தங்கள் பகுதியில் ஆன்மிக நிகழ்ச்சிகளின் பொழுது, தங்கள் இல்லத்தின் திருமணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற விசேஷங்கள் நடைபெறும் பொழுது இப்புத்தகங்களை அச்சு விலையில் பெற்று பக்தர்களுக்கு வழங்கி மகிழ விருப்பம் உள்ளவர்கள் அணுகவும்:

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்**
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.
✆ **99404 47 437**
**(8.00 - 10.00 pm. only)**

## சங்கடங்கள் போக்கியருள் சங்கரி புத்திரன் கானம்

(பூமியில் மானிட ஜென்மம் எடுத்துமோர் - மெட்டு)



Sri Mahaswami amused by a devotee's observation, Chennai – 1958

ஓர் ஐந்து கரம் கொண் டருள் கண நாதா
ஈரைந்து கரம் கொண்ட ஹேரம்ப நாதா
ஓர் ஆறு முகத்தனின் உடன்பிறந் தவனே
ஈராறு தேய்பிறை சதுர்த்தியின் நாதனே

ஓர் ஐந்து விரல்களால் வரமருள் வோனே
ஈரைந்து மாத கரு அறுத்தோனே
ஓர் ஆறு முகத்தனை வென்றிட் டவனே
ஈராறு தேய்பிறை சதுர்த்தியின் நாதனே

நஓர் ஐந்து முகத்தனின் அருள்பெற் றவனே
ஈரைந்து திசைகளும் அருள்கஜ முகனே
ஓர் ஆறு படைவீடு கொண்டருள் வோனே
ஈராறு தேய்பிறை சதுர்த்தியின் நாதனே

ஓர் ஐந்து புலன்களும் அடக்கிட அருள்வாய்
ஈரைந்து நாடிகள் துடித்திட அருள்வாய்
ஓர் ஆறு நிலையும் கடந்திட அருள்வாய்
ஈராறு தேய்பிறை சதுர்த்தியின் நாதனே



## அனுக்ரஹம் புரிந்தருள் அனுஷ நாத கானம்

(பூபாளம் - மெட்டு)

போற்றி மால் அயன் காணா பிரம்மாண்ட ஜோதி
போற்றி வான் கருணையோ டருள்அனுஷ ஜோதி
போற்றி வான் தில்லையின் ஆனந்த ஜோதி
போற்றி மால் தேவர் துதி காஞ்சியின் ஜோதி

அனுஷத்தில் உதித்திட்ட அத்வைத ஜோதி
அனுஷத்தில் அமர்ந்திட்ட சாத்வீக ஜோதி
அனுஷத்தில் பணிந்திடவே அருள் ஆதி ஜோதி
அனுஷத்தில் அருள்பொழியும் ஆகம ஜோதி

ஆதிரையில் உருக் கொண்டு ஆடி அருள் ஜோதி
ஆதி நெற்றி வழி வந்த ஆறு முக ஜோதி
ஆதி சங்கர உருக்கொண்ட ஆலடி ஜோதி
ஆதி காஞ்சி தலமமர்ந்து அருள் கலவை ஜோதி

அஞ்சி நின்றோர்க்கருள் புரியும் ஆதி ஞான ஜோதி
அஞ்சும் எட்டும் உரைக்கவந்த ஹரிஹர ஜோதி
அஞ்சா நெஞ்சருள் ஆதி மலை ஜோதி
அஞ்சேல் என்றபயமருள் திருக்காஞ்சி ஜோதி



## ஆனந்த வாழ்வருளும் அத்வைத குரு

# மஹாபெரியவா கானம்

(சிட்டுக் குருவி சிட்டுக் குருவி - மெட்டு)

காலடி குரு சங்கரரே மஹா பெரியவா - ஆதி
ஆலடி குரு சங்கரரே மஹா பெரியவா
காலடியை பணிந்தோர்க் கருள் மஹா பெரியவா - காஞ்சி
மாவடி தெய்வ குரு மஹா பெரியவா

அற்புதங்கள் புரிந்தருளும் மஹா பெரியவா - ஆதி
அற்புத ஜோதியே மஹா பெரியவா
கற்பனைக்கும் எட்டாத மஹா பெரியவா - ஞான
கற்பூர ஜோதியே மஹா பெரியவா



பொற்கூரை சிவ பரமே மஹா பெரியவா - ஆதி
பொற்பாதம் பணிந்தோர்க்கருள் மஹா பெரியவா
பற்றில்லா மனமருள்வீர் மஹா பெரியவா - பாதம்
பற்றிடவே தினமருள்வீர் மஹா பெரியவா

நாற்புரமும் பீடம் கொண்ட ஆதி சங்கரா - நித்தம்
நாற்புரமும் நடந்து ஆசி தந்த சங்கரா
நற்றுணையாய் நாளுமருள் காஞ்சி சங்கரா - நாடும்
நற்பதம் தவறாதருள் காஞ்சி சங்கரா



## ஆதி சிவகுரு ஆதிசங்கர ஸ்வாமி நாத

# மஹாபெரியவா கானம்

(சொல்ல சொல்ல இனிக்குதடா - மெட்டு)



சங்கரா என்றழைத்தே பணிந்தோமே - குருவே
சங்கடம் தீர்ந்து மனம் கணிந்தோமே

ஆதி குரு சங்கரரே ஜோதி சங்கரா
ஆலடியில் அமர்ந்தவரே ஆதி சங்கரா
ஆதி காஞ்சி தலம் அமர்ந்த வேத சங்கரா
- குருவே மஹா பெரியவா குருவே..

ஆதி நெற்றி ஜோதி தந்த ஆறு முகனே
ஆதி வெற்றி வேலவனே ஸ்வாமிநாதனே
ஆதி குருவின் குருவான ஸ்வாமி நாதனே
- குருவே மஹா பெரியவா குருவே...

ஆதி அந்தம் ஆனவரே ஆத்ம சங்கரா
ஆதி வேத சாலரம் உரைக்க வந்த சங்கரா
ஆதி தர்மம் காத்திடவே அருள் சங்கரா
- குருவே மஹா பெரியவா குருவே..



## சித்தத்தில் உறைந்தருள் சத்தியத் திருஉரு

# மஹாபெரியவாகானம்

(காயத்ரிமந்திர - மெட்டு)

சந்திர சேகர பத சரணம்
சாந்த ஸ்வரூபா பத சரணம்
சந்ததம் அருள் குரு பத சரணம்
சாந்த மனமருள் பத சரணம்



காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள்
தபோவனம் - கோவிந்தபுரம்

அத்வைதகுருவேபதசரணம்
சாத்வீகதிருவேபதசரணம்
ஆத்மபந்துவேபதசரணம்
நித்யநிரந்தரபதசரணம்

முத்தமிழ் தெய்வமேபதசரணம்
முத்துக் குமரனேபதசரணம்
சத்தியசீலரேபதசரணம்
சித்தத்தில் உறைவீர் பதசரணம்

எத்திக்கும் அருளும் பதசரணம் - மனம்
தித்திக்கும் வரமருள் பதசரணம்
புத்தியில் அமர்ந்தருள் பதசரணம் - ஞான
வித்திடும் விமலமேபதசரணம்



## திருக்காஞ்சியில் அமர்ந்தருளும் திருக்கயிலைநாதர் மஹாபெரியவாகானம்

(பாக்கியா தலக்ஷ்மிபாரம்மா- மெட்டு)

பாக்கியம் தான் பெற்றோம் சங்கரரே - நூறாண்டு தரிசன
பாக்கியம் தான் பெற்றோம் சங்கரரே



அனுஷத்தில் உதித்திட்ட ஆதிசங்கரா
அணுவும் அண்டமும் ஆனசங்கரா
அனுக்ரஹம் புரிந்தே அருள்வீர் குருவே
அனுதினம் உம்மை பணிந்திட மனமே

அத்வைத திருவே ஆலடி குருவே
அதிசயம் புரிந்தாட் கொண்டருள் குருவே
அதர்மம் உணர்த்திட வந்திட்ட குருவே
அதிகாலை பணிந்திட அருள்வீர் தினமே

அச்சுத கேசவ மாதவ திருவே
அஞ்ஞானம் போக்கிட வந்திட்ட குருவே
அல்லி விரல்களால் அபயம் அருள்வீர்
அளவிலா ஆனந்தம் அருள்வீர் நிதமே



# கலவையில் உதித்திட்ட காலடி சங்கர
# மஹா பெரியவா கானம்

(அனரோ அனரோ - மெட்டு)



ஆலடி திருவே காலடி திருவே
கலவையில் உதித்திட்ட காலடி குருவே
மாலயன் காணா மாமலை திருவே
வேலவனாய் வந்த ஸ்வாமிநாத குருவே

கால காலனே காம தஹனனே
பால குருவே பரமனின் உருவே
ஞாலம் காக்கும் ஞான திருவே
காலமெல்லாம் அருள் திருக்காஞ்சி குருவே

உலகெங்கும் அமர்ந்தருள் உத்தம் திருவே
நிலமெங்கும் நடந்திட்ட தெய்வீக திருவே
தலமெங்கும் நின்றருள் நடராஜ திருவே - மனம்
கலங்கியே நின்றோர்க் கருள் காஞ்சி குருவே

நீல கண்டனே நீள் சடையோனே
அலமலந்தோர்க்கருள் ஆதி நாதனே
வலம் வந்தெங்கும் வரம் தந்த திருவே
நலமருள் திருவே திருக்காஞ்சி குருவே





**சிரம் சாய்த்து பணிந்திட கரம் காட்டி கரைசேர்க்கும்**

# மஹாபெரியவா கானம்

(பிடிகிட தலம்ரால பெல்லி கூத்துரு - மெட்டு)



வரம் தர வந்திட்ட விஸ்வ சங்கரா - இரு
கரம் கூப்பிப் பணிந்திடவே அருள் சங்கரா

சிரம் ஆறு கொண்டு வந்த ஜோதி சங்கரா - அருட்
கரம் காட்டி கரையேற்றும் காஞ்சி சங்கரா
கரம் கவித்தோர்க்கருள் புரியும் குரு சங்கரா - வேத
சாரம் உணர்த்த வந்திட்ட காஞ்சி சங்கரா

சுரம் எங்கும் அமர்ந்தருளும் தியான சங்கரா - சனாதன
சாரம் உணர்த்த வந்திட்ட ஆதி சங்கரா
பரம் பொருளை உணர்ந்திடவே அருள் சங்கரா - மன
பாரம் போக்கி ஆட்கொள்வீர் காஞ்சி சங்கரா

பூரம் உதித்த அன்னை துதி காஞ்சி சங்கரா - ஞான
பரம் பொருளாய் பீடம் ஏற்ற குமார சங்கரா
ஈரம் நெஞ்சில் வளர்த்தருளும் வேத சங்கரா - பக்தி
நேரம் உணர்த்தி அருள்வீர் ஜெகத்குரு சங்கரா

(சுரம் - மலை)



## சிவகுரு நாத ஹரிஹர பிரம்ம ரூப

## மஹாபெரியவா கானம்

(காயத்ரி மந்திர - மெட்டு)

சிவ குரு நாதா பத சரணம்
குரு ஸ்வாமி நாதா பத சரணம்
ஸ்வாமிநாத சங்கர பத சரணம்
சங்கர ஜெகத்குரு பத சரணம்

ஸ்ரீ ஹரி மாதவ பத சரணம்
ஹரி ஹர பிரம்மனே பத சரணம்
ஹரஹர சங்கர பத சரணம்
சங்கர ஜெகத்குரு பத சரணம்

அருஉரு பரப்பரம்ம பத சரணம்
பரப்ரம்ம ஜோதியே பத சரணம்
ஜோதி சங்கர பத சரணம்
சங்கர ஜெகத்குரு பத சரணம்

அஞ்ஞான இருள் போக்கும் பத சரணம்
இருள்நீக்கி குரு தந்த பத சரணம்
குருகுஹ சங்கரா பத சரணம்
சங்கர ஜெகத்குரு பத சரணம்



## ஆலடிநாத ஆதிசங்கர கலவை சந்திரசேகர

# மஹாபெரியவா கானம்

(நான் பெற்ற செல்வம்- மெட்டு)

கண்கண்ட தெய்வமே கலியுக தெய்வமே கண்ணிமையாய்
காக்கும் திருக்காஞ்சி தெய்வமே

ஆலடி ரூபமே சாம்ப சிவா காலடி குருபரமே
ஆதிசங்கரா கலவையில் உதித்திட்ட சந்திரசேகரா
- கருணா ஸாகர மஹாஸ்வாமி

ஷண்முக நாதா ஸ்வாமி நாதா
ஷண்மத நாதா குருஸ்வாமி நாதா
ஷண்மத பீடம் உறை சங்கரமே
- கருணா ஸாகர மஹாஸ்வாமி



கேட்டதும் தந்திடும் கற்பகமே
ஆட்கொண்டருளிடும் அற்புதமே
வாட்டத்தை போக்கிடும் பொற்பதமே
- கருணா ஸாகர மஹாஸ்வாமி

சங்கரானந்த கானங்கள் வருடந்தோறும் மஹா பெரியவாளின் ஜெயந்தி மற்றும் ஆராதனையின்போது மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு குரு அருட் பிரசாதமாக கிடைப்பதற்கு பல வகையிலும் அன்புள்ளத்தோடு பேராதரவு நல்கி வரும் அனைத்து நல் இதயங்களையும் வணங்கி மகிழ்கிறேன். அவர் தம் குடும்பத்தினர் அனைத்து வளங்களையும் நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ மஹா பெரியவாளின் பொற்பாதங்களை பணிகிறேன்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

### ஆதி காஞ்சி அமர் ஆதி சங்கர
## மஹாஸ்வாமி கானம்
(பிரபோ கணபதே - மெட்டு)



மஹா பெரியவா - திருக்
காஞ்சியில் அமர்ந்தருள் கற்பகத் தருவே
மஹா பெரியவா பெரியவா பெரியவா

ஆதி மலையனே அண்ணா மலையனே
ஆலடி அமர்ந்திட்ட குருநாதா
ஆனந்த தாண்டவ நர்த்தன சிவனே
ஆறாத் துயர் தீர்த் தருள் குருவே

ஆதி சங்கரா காலடி சங்கரா
ஆறு மதம் தந்த குரு சங்கரா
ஆதி வேதத்தை உணர்த்திட்ட சங்கரா
ஆறாத் துயர் தீர்த தருள் குருவே

ஆறு முகம் கொண்டு வந்திட்ட திருவே
ஆறுதலை அருள் சிவ திரவே
ஆறு மலை கொண்ட ஷண்முக திருவே
ஆறாத் துயர்தீர்த் தருள் குருவே

சங்காரனந்த கானங்கள் தொடர்ந்து வெளிவர தங்களால் இயன்ற நன்கொடைகளை நல்கி குருவருள் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ரூ.108/-** அளிப்பவர்களுக்கு அடுத்தடுத்த வெளியீடுகள் தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.504/-** அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.1008/-** அல்லது அதற்கு மேல் அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் மற்றும் 250 சங்காரனந்த கானங்கள் ஆடியோ - Pen Drive / DVD மூலம் தபாலில் அனுப்பப்படும்.

**G-Pay No : 63 83 45 35 03**
**Whatsapp No : 99404 47 437**

நன்கொடை அளித்தவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொகை மேற்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

- தேனுபுரீஸ்வர தாசன் இல. சங்கர்

# ஆனந்த வாழ்வருளும் அத்வைத குரு
# மஹாபெரியவா கானம்

பெரியவா பெரியவா என்றும்மை பணியவே
புரிந்ததே முன்ஜென்ம பாவங்களே
தெரிந்ததே தெரிந்ததே தெளிவான பாதையே
புரிந்ததே  பூலோக மாயங்களே

அரி நாமம் உரைத்திட்ட பிரஹல்லாத திருவே
அரியணை அமர்ந்திட்ட அத்வைத குருவே
அரி நாமம் உரைத்தெங்கும் வந்திட்ட திருவே
அரிதாரம் பூசாத ஆனந்த குருவே

அரி துயில் கடலதன் ஆலமுண்ட திருவே
அரியதாம் அத்வைத  ஷண்மத குருவே
அரியொடு நின்றருள் ஹரிஹர திருவே
அரிதான பலபிறப் பெடுத்திட்ட குருவே

அரி அயனும் அறியொண்ணா பெருஞ்சோதி திருவே
அரி தேவர் பணிந்திட்ட திருக்காஞ்சி குருவே
அரியதோர் பிறப்பெடுத்த ஆதி குரு திருவே
அரியதாம் பிறவிநோய் தீர்த்தருளும் குருவே



## ஆனந்த வாழ்வருளும் அத்வைத குரு
## மஹாபெரியவா கானம்

நாமம் சொல்லி நாமம் சொல்லி நாளும் பணிவோம் - சங்கர
நாமம் சொல்லி நாளும் சொல்லி பாதம் பணிவோம் (சங்கர)

வேதம் சொல்லி கீதம் பாடி பாதம் பணிவோம் - நால்
வேதம் சொல்லி பதிகம் பாடி பாதம் பணிவோம் (சங்கர)

சங்கர பாலன் ஷண்முக வேலன் பாதம் பணிவோம் - குரு
சங்கர பாலன் ஸ்வாமிநாத பாதம் பணிவோம் (சங்கர)

ஆலடி சங்கர காலடி சங்கர பாதம் பணிவோம் - ஞான
கலவை சங்கர காஞ்சி சங்கர பாதம் பணிவோம் (பங்கஜ)

வேத சங்கர வைத்திய சங்கர பாதம் பணிவோம் - சதுர்
வேத சங்கர சத்திய சங்கர பாதம் பணிவோம் (மங்கள)

ஜெய ஜெய சங்கர ஜெகத்குரு சங்கர பாதம் பணிவோம்
ஹரஹர சங்கர அத்வைத சங்கர பாதம் பணிவோம் (ஆதிகுரு)


### சங்கரானந்தம்

இது வரை சற்றேறக்குறைய 800 பாடல்களுக்கு மேல் எழுத வைத்துள்ள காஞ்சி மஹாஸ்வாமி, 13 சங்கரானந்த தொகுப்புகளை மஹா பெரியவாளின் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக இதுவரை 1,65,000 பிரதிகளுக்கு மேல் வழங்கி அடியேனை அகமகிழச் செய்துள்ளார். மஹாபெரியவாளின் அத்யந்த பக்தர்களின் பொருளுதவியால் இப்பெரும் புண்ணிய குரு கைங்கர்யம் அமோகமாக நடந்து கொண்டுள்ளது. தற்போது சங்கரானந்தம் - தொகுப்பு 14 வெளிவர தங்களால் இயன்ற பொருளுதவி செய்து குரு கைங்கர்யத்தில் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஊர் கூடி தேர் இழுத்தல் போல
பலர் கூடி மஹாபெரியவாளின் மஹிமைகளை போற்றும் சங்கரானந்த தேரை
மலர் தூவி வரவேற்று அனைவரது இல்லத்திலும் சேர்த்து
பலர் மனமகிழ்ந்து அகம்குளிரச் செய்வோம் வாரீர். . .

என்றென்றும் குரு கைங்கர்யத்தில் திளைத்து , திருப்பாதம் பணிந்து

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர், 99404 47 437.**

(நன்கொடை அளித்து இப்புண்ணிய பணியில் பங்கு பெற விழையும்
நன்நெஞ்சங்கள் உடன் அழைக்கவும்)

**M.O.** செய்ய : திருமதி. தனுஜா சங்கர் , 104 அரவிந்த நகர் ,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.

# சமயத்தில் காத்தருளும்
# காஞ்சி சங்கர குரு கானம்

மறை தந்த சிவனாரே மஹா பெரியவா - நான்
மறை காக்க வந்தவரே மஹா பெரியவா
பிறை அணிந்த பெம்மானே மஹா பெரியவா - பக்தர்
குறை தீர்க்க வந்தவரே மஹா பெரியவா

மாமலையின் சிவனாரே மஹா பெரியவா - காஞ்சியில்
மாமலையாய் அருள்பவரே மஹா பெரியவா
மாமதுரை சுந்தரரே மஹா பெரியவா - கச்சி
மாவடியில் அமர்ந்தவரே மஹா பெரியவா

சந்திர சூர்ய அக்னி நேத்ர மஹா பெரியவா - ஆதி
சந்திர மௌலீஸ்வரரே மஹா பெரியவா
சந்திரசேகரேந்திர குரு மஹா பெரியவா-குளிர்
சந்திர காந்தமே காஞ்சி மஹா பெரியவா

ஆதி ஜோதி நாயகரே மஹா பெரியவா - ஆலடி
ஆதி குரு நாதரே மஹா பெரியவா
ஆதி குரு ஸ்வாமிநாத மஹா பெரியவா - காலடி
ஆதி குரு சங்கரரே மஹா பெரியவா



## மங்கலங்கள் அருளும் சங்கரகுரு
## மஹாபெரியவா கானம்

(நாத விந்து கலாதி நமோ நம - மெட்டு)

சங்கர நாமம் பாடி வந்தோமே
சங்கர துணையே நாடி வந்தோமே
சங்கர திருவே சரண் புகுந்தோமே - மஹா ஸ்வாமி

சங்கர கீதமே பாடி நின்றோமே
சங்கர நாதமே நா நவின்றோமே
சங்கர திருவே தம்பணிந்தோமே - மஹா ஸ்வாமி

சங்கர சிவமே கண்களால் கண்டோம்
சங்கர தவமே நெஞ்சினில் கொண்டோம்
சங்கர ஷண்முக ஸ்வாமி நாத - மஹா ஸ்வாமி

சங்கரா என்றே வலம் வந்தோமே
சங்கரா என்றே அடி பணிந்தோமே
சங்கர சந்திர மௌலீஸ்வர திருவே - மஹா ஸ்வாமி



நடமாடும் தெய்வம் நமசிவாய ரூபம்

## காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(ஸ்ரீ ஜானகி சரணம் - ஸ்ரீ ராகம் - மெட்டு)

குருவே பொற் பாதமே சரணம் - கண் கண்ட தெய்வமே
குருவே பொற் பாதமே சரணம்

அத்வைத திருவே அனுஷத்தின் திருவே
சாத்வீக திருவே சங்கரரே
எத்திக்கும் காத்திடும் யதி ராஜ திருவே
சித்திக்க சகலமும் அருள்சங்கரரே

ஆடிய பாதத்தால் அவனியில் நடந்தீர்
ஓடியே வந்தீர் ஊரெங்கும் நடந்தீர்
தேடியே வந்தருள் தெய்வமாய் நின்றீர்
ஓடிட வினைகள் வரங்கள் தந்தீர்

நாடிய தனைத்தும் நொடியில் தந்தீர்
வாடிய முகங்கள் மலர்ந்திட செய்தீர்
தேடிய செல்வம் தெய்வமாய் தந்தீர்
விடியலை வாழ்வில் அனைவர்க்கும் தந்தீர்

கூடிய பக்தர்முன் காட்சியே தந்தீர்
கோடி நிலவாய் குளிர்ச்சியை தந்தீர்
அடியார்க்கருளை தெய்வமாய் பொழிந்தீர்
முடிந்திட பிறப்பும் வரங்கள் அருள்வீர்



### நம்பி வந்தோர்க்கருளும் நடமாடும் தெய்வம்

## காஞ்சி மஹாஸ்வாமி கானம்

(மலர்கள் நனைந்தன பனியாலே - மெட்டு)



சிவமாய் அமர்ந்தருள் தவத்திருவே - பெருந்
தவமாய் வந்திட்ட சிவத்திருவே
பவம் தனை கடந்திட அருள் குருவே - இக்
குவலயம் காத்தருள் ஜெகத் குருவே

ஆறிரு கரத்தனின் திரு உருவே - ஓர்
ஆறு மதம் தந்த சங்கரரே
ஆறிரு அனுஷத்தில் அருள் திருவே - ஓர்
ஆறு முகம் கொண்ட ஸ்வாமி நாதரே

ஐயிரு முகத்தனின் குல குருவே - ஓர்
ஐந்தெழுத்தோதிட அருள் குருவே
ஐயிரு தமிழ் கேட்டு அருள் திருவே - ஓர்
ஐவிரலால் அருள் ஜெகத் குருவே

மூவிரு முகம் கொண்ட வேதியனே - என்றும்
மூவிழியால் அருள் ஜோதியனே
மூவிரு மஞ்சனம் ஏற்பவனே - அருள்வீர்
மும்மலம் போக்கியே மஹாஸ்வாமி



### சந்ததம் காத்தருளும் சந்திரசேகர

## மஹாபெரியவா கானம்



சந்திர மௌலீஸ்வர சங்கரரே - குளிர்
சந்திர முகம் கொண்ட சங்கரரே
சந்ததம் பணிந்திட அருள்வீரே - பெரும்
சந்தான பாக்கியம் அருள்வீரே

சாந்தமாய் அமர்ந்தருள் சங்கரரே - மன
சாந்தியை தந்தருள் சங்கரரே
சிந்திக்க  உம்மையே அருள்வீரே - புன்னகை
சிந்தியே வரமருள் ஜெகத் குருவே

சீர்காஞ்சி தலமமர் சங்கரரே - ஞான
சீலராய் அமர்ந்தருள் சங்கரரே
சுந்தர ஷண்முக சங்கரரே - ஞான
சூரிய திருவே சங்கரரே

செஞ்சடை ஆலடி சங்கரரே - ஜோதி
செஞ்சுடர் நெற்றி சங்கரரே
சேவடி பணிந்திட சங்கரரே - கொண்டு
சேர்ப்பீர் அக்கரை சங்கரரே

சைவமும் தெய்வமும் உணர்ந்திடவே - வந்த
சொல்லில் அடங்கா ஜோதியனே
சோகங்கள் தீர்த்திட வந்தவரே - சகல
சௌபாக்கியம் அருள்வீர் சங்கரரே



**அக்கணமே நம் துயர் தீர்க்கும் அனுஷ நாதர்**

## மஹாபெரியவா கானம்

(முதாகராத்த மோதகம் - மெட்டு)

அனுஷ நாத பாஹிமாம் ஆதி நாத பாஹிமாம்
அனுகிரஹமே புரிந்தருளும் ஆதி குரு ரக்ஷமாம்
அனஷமுதித்த ஸ்வாமிநாத ஷண்முகனே பாஹிமாம்
அனுதினமும காத்தருள்வீர்அனுஷ குரு ரக்ஷமாம்

அகல் விளக்காய் அமர்ந்தருளும் ஆதி ஜோதி பாஹிமாம்
அகம் குளிர வரமருளும் ஆதி குரு ரக்ஷமாம்
அகந்தை போக்கி ஞானமருள் ஆறுமுகனே ரக்ஷமாம்
அகவை நூறு கண்டவரே அனுஷ நாத ரக்ஷமாம்

அத்வைதம் உணர்த்த வந்த ஆதி சங்கர பாஹிமாம்
அதிசயங்கள் புரிந்தருளும் குரு சங்கர ரக்ஷமாம்
அதிமதுரமாய் அமர்ந்தருளும் ஜெகத் குரு பாஹிமாம்
அதிஉன்னதம் உணர்த்த வந்த காஞ்சி குரு ரக்ஷமாம்

அஞ்ஞானம் போக்க வந்த ஆதி சக்தி பாஹிமாம்
அஞ்சிவந்தோர்க் கபயம் அருள் ஆத்மசக்தி ரக்ஷமாம்
அல்லல் தீர்த்தருள் புரியும் அனுஷகுரு பாஹிமாம்
அலமலந்தோர்க் காறுதலே காஞ்சி குரு ரக்ஷமாம்





**ஆலடி நாத ஆதி சங்கர கலவை சங்கர**

## மஹாபெரியவா கானம்

(ராகம் - ஹரி காம்போஜி)



நடமாடும் தெய்வமே நடை ராஜ ரூபமே
நாடி வந்தே நலம் புரிந்த நான்மறை நாதமே
நின் பதம் பணிந்தோர்க்கருள் நிர்மல ரூபமே
நீலகண்ட சங்கரா அருள் காஞ்சி சங்கரா

அலைகடல் நாதனே அனந்த பத்மநாபனே
ஆனந்த கூத்தனே அம்பலத் தாண்டவனே
இம்மை மறுமை உணர்த்த வந்த ஈடில்லா சங்கரனே
ஈர்த்தாட்கொண்டருள் புரியும் திருக்காஞ்சி சங்கரா

கருணை தெய்வமே கற்பகமே அற்புதமே
கார்கால மேகமாய் அருள் காமதேனுவே
கிழக்கில் உதித்தருளும் கதிரவனே ஆதவனே
கீர்த்திமிகு காமகோடி திருக்காஞ்சி சங்கரா

சங்கர ஸ்வாமிநாத சந்திர சேகர சிவா
சாந்த ரூப சுந்தர காலடி குரு சங்கரா
சிற்றம் பல சிவா குற்றம் பொறுத்தருள்பவா
சீர் காஞ்சி அமர்ந்தருளும் ஸ்ரீ மஹா பெரியவா



### ஆதி காஞ்சி அமர் ஆதி சங்கர

## மஹாஸ்வாமி கானம்

(அன்பில் மலர்ந்த நல் ரோஜா - மெட்டு)

காஞ்சியில் வரமருள் சங்கரா - பக்தர்
நெஞ்சினில் அமர்ந்தருள் சங்கரா
நஞ்சுண்ட கண்டனே நாகா பரணனே
செஞ்சடை சிவமே மஹா ஸ்வாமி

சந்திரப் பிறை கொண்ட மௌலீஸ்வரா
சாந்தமாய் அமர்ந்தருள் சர்வேஸ்வரா
சிந்தையில் நிறைந்தவா சங்கர குரு பரா
சந்ததம் காத்தருள்(வீர்) மஹாஸ்வாமி

ஷண்மதம் தந்திட்ட சங்கரரே
ஷண்முகனாய் வந்திட்ட சங்கரரே
கண் மூன் றுடையவா பாரெங்கும் நடந்தவா
எண்ணிரண் டருள்வீர் மஹா ஸ்வாமி

வான் தில்லை தலம் நின்ற தாண்டவா
தென் கோடி பீடம்கொண் டமர்ந்தவா
பொன் முகம் கொண்டவா மஹா பெரியவா
என் வினை தீர்த்திட வரமருள்வீர்



## ஆதி சிவகுரு ஆதிசங்கர ஸ்வாமிநாத
# மஹாபெரியவா கானம்

(நீலக் கடலின் ஓரத்தில்/ரகுபதி ராகவ - மெட்டு)

நீல கண்டனே சிவ சங்கரா
கால காலனே சிவ சங்கரா
கோல குருவே குரு சங்கரா
ஞாலம் போற்றிடும் தவ சங்கரா



ஆலடி அமர்ந்திட்ட குரு சங்கரா
காலடி பதித்திட்ட குரு சங்கரா
மாவடி அமர்ந்திட்ட மௌலீஸ்வரா
சேவடி பணிந்திட அருள் ஈஸ்வரா

ஷண்முக நாதனே சிவ சங்கரா
ஷண்மதம் தந்திட்ட குரு சங்கரா
ஷண்மத பீடம்கொண் டமர்ந்திட்டவா
ஷண்முக ஸ்வாமிநாத குரு சங்கரா

நடராஜ மூர்த்தமே சிவ சங்கரா
நடந்தீர் பாரெங்கும் குரு சங்கரா
நடமாடும் தெய்வமே குரு சங்கரா - என்றும்
நடந்திட நற்பாதை அருள் சங்கரா



### ஆனந்தவாழ்வருளும் அத்வைத குரு

## மஹாபெரியவாகானம்

(நாதஸ்வரஓசையிலே - மெட்டு)



அத்வைத சற்குருவே ஆதிரை திருஉருவே
சாத்வீக சங்கரரே சத்தியத்தின் திருஉருவே

பால்முக பாலகரே பரம பீடம் ஏற்றவரே
நால்வேத நாயகரே நானிலம் நடந்தவரே
வேல் ஏந்தும் வேலவரே வேதனைகள் தீர்ப்பவரே
வல்வினைகள் போக்கிடவே வந்தமர்ந்த சங்கரரே

கல்லாலின் கீழ் அமர்ந்த காருண்ய சங்கரரே
பல்லுயிரை காத்திடவே பாதை தந்த சங்கரரே
நல்லாசி தந்தென்றும் நற்றுணை ஆனவரே
வல்வினைகள் போக்கிடவே வரமருளும் சங்கரரே

இல்லமது ஒளிபெறவே உள்ளத்தில் உறைபவரே
நல்லறம் பேணிடவே நாள்தோறும் அருள்பவரே
அல்லல்கள் தீர்ப்பவரே ஆதவனாய் அருள்பவரே
தொல்வினை தீர்ப்பவரே தோன்றாத் துனை சங்கரரே



### அல்லல்கள் தீர்தருளும் அனுக்ஷநாத

## மஹா பெரியவா கானம்



ஜெய ஜெய சங்கர சிவசங்கரா
ஜெகத்குருசங்கர குரு சங்கரா
கருணா ஸாகர சிவசங்கரா
காஞ்சியில் அமர்ந்தருள் குரு சங்கரா

அனுஷத்தில் பிறந்திட்டஆதிசங்கரா
ஆதிரை நாதனே குரு சங்கரா
அனுகிரஹம் புரிந்தருள் சிவசங்கரா
ஆலடிநாதனே குரு சங்கரா

அண்ணாமலையே சிவசங்கரா
ஆதிஜோதியே குரு சங்கரா
அண்டி நின்றோர்க்கருள் சிவசங்கரா
ஆறுமுக ஸ்வாமிநாத குரு சங்கரா

அம்பலத்தரசனே சிவசங்கரா
ஆறுமதம் தந்திட்ட குரு சங்கரா
அத்வைத பீடதின் குரு சங்கரா
ஆதுரம் தீர்த்தருள் காஞ்சி சங்கரா





கருணா ஸாகர காஞ்சி மாமுனி

## மஹா பெரியவா கானம்



ஹர ஹரசங்கர குரு நாதா
ஜெய ஜெய சங்கர குரு நாதா
சந்திரசேகர குரு நாதா
சாந்த ஸ்வரூபா குரு நாதா

அம்பலத் தரசனே குரு நாதா
ஆறு முகனே குரு நாதா
அஞ்சிவந்தோர்க்கருள் குரு நாதா - மன
ஆதங்கம் தீர்த்தருள் குரு நாதா



கண் கண்டதெய்வமே குரு நாதா
காலடி சங்கர குரு நாதா
கற்பகத் தருவே குரு நாதா
காருண்ய கடலே குரு நாதா



சந்திரமௌலீஸ்வர குரு நாதா
சாம்ப சதாசிவ குரு நாதா
சந்ததம் பணிந்திட குரு நாதா - மன
சாந்தியை அருள்வீர் குரு நாதா

**சங்கரானந்தம் பாடல்களை கேட்டு மகிழவும் :**

www.soundcloud.com/lakshmikanthan-shankar
www.soundcloud.com/user-759313743
https://m.soundcloud.com/user-119131646
www.soundcloud.com/sankaranandham11songs
www.soundcloud.com/user-933351650
www.soundcloud.com/user-8400316/sankaranandham-vol-12-songs

### ஆதிகாஞ்சிஅமர் ஆதிசங்கர

## மஹாஸ்வாமிகானம்

(நாதவிந்துகலாதிநமோநம - மெட்டு)

ஆதி வேத நாதா நமோ நம
ஜோதி ரூபா பாலா நமோ நம
ஆதி சங்கர அத்வைத சங்கர - மஹா ஸ்வாமி

ஆலடி அமர்ந்தருள் ஆதி நமோ நம
காலடி சங்கர குருவே நமோ நம
கலவையில் உதித்திட்ட சந்திர சேகர - மஹா ஸ்வாமி

ஸ்வயம்பு சங்கர திருவே நமோ நம
ஸ்வாமி நாத குருவே நமோ நம
ஸ்வாமி நாத பூமி நாத - மஹா ஸ்வாமி

அருணாச் சலசிவ ஆதி நமோ நம
கருணா ஸாகர ஜோதி நமோ நம
தருணத்தில் காத்தருள் தண்டபாணியே - மஹா ஸ்வாமி

ஆடி நின்றருள் ஆதி நமோ நம
கோடி சூர்ய பிரகாஸா நமோ நம
பாடி பணிந்தோம் பற்றிட பூவடி - மஹா ஸ்வாமி



# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
# ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்
# அஷ்டோத்திர சத நாமாவளி



ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
ஓம் ஸன்யாஸாஸ்ரம சிகராய நம:
ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
ஓம் கருணாஸாகராய நம:
ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
ஓம் பக்த பரிபாலக ஸ்ரேஷ்டாய நம:
ஓம் தர்ம பரிபாலகாய நம:
ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்யஸ்வரூபாய நம:
ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
ஓம் ஸ்வதர்ம பரிபோஷகாய நம:
ஓம் சாதுர் வர்ண்ய சம்ரக்ஷகாய நம:
ஓம் லோக ரக்ஷண ஸங்கல்பாய நம:
ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
ஓம் தர்ம ரக்ஷண ஸந்துஷ்டாய நம:



ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:
ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
ஓம் ருத்ராக்ஷ கிரிட தாரிணே நம:
ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
ஓம் மனஸ் சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:

ஓம் அபய ஹஸ்தாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் யக்ஞ புருஷாய நம:
ஓம் யக்ஞாநுஷ்டான ருசிப்ரதாய நம:
ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
ஓம் யக்ஞ பலதாய நம:
ஓம் யக்ஞ ப்ரியாய நம:
ஓம் உபமான ரஹிதாய நம:
ஓம் ஸ்படிக துளஸீ ருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தயவஸ்தாதீதாய நம:
ஓம் கோடி ஸூர்யதுல்ய தேஜோமய சரீராய நம:
ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
ஓம் அச்வகஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
ஓம் கனகாபிஷிக்தாய நம:
ஓம் ஸ்வர்ண வில்வதள பூஜிதாய நம:
ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
ஓம் த்வாதச லிங்க ஸ்தாபகாய நம:
ஓம் கான ரஸஞ்ஞாய நம:
ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
ஓம் ஸகல கலா ஸித்திதாய நம:
ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
ஓம் அஷ்ட ஸித்திப்ரதாயகாய நம:
ஓம் ஸ்ரீ சாரதா மட ஸுஸ்திதாய நம:
ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:
ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
ஓம் ஸ்ரவணானந்தகர கீர்த்யே  நம:
ஓம் தர்சனானந்தாய நம:
ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:



ஓம் சைவ வைஷ்ணவாதி மான்யாய நம:
ஓம் சங்கராசார்யாய நம:
ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
ஓம் ராமகதா ரஸிகாய நம:
ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகல கலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
ஓம் அவித்யா நாசகாய நம:
ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
ஓம் லிங்கஸ்வரூபாய நம:
ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
ஓம் காலட்யாம் சங்கர கீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:
ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ சைல சிகரவாஸாய நம:
ஓம் டமருகநாத விநோதனாய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் துர்மதநாசகாய நம:
ஓம் ஆபிசாரிகதோஷஹர்த்ரே நம:
ஓம் மிதாஹாராய நம:
ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
ஓம் ஸ்ரீ சக்ரார்ச்சன தத்பராய நம:
ஓம் தாஸானுக்ரஹ காரகாய நம:
ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
ஓம் ஸர்வலோக க்யாத சீலாய நம:
ஓம் வேங்கடேஸ்வர சரணபத்மஷ்டபதாய நம:
ஓம் ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திமௌலீஸ்வர பூஜாப்ரியாய நம:



இதி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஜெகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி அஷ்டோத்திர சத நாமாவளி சம்பூர்ணம்.



அன்பு ஆன்மிகம் ஆனந்தம்

# ஆன்மிக உலா

சென்னையைச் சுற்றியுள்ள பழமையான
திருக்கோயில்கள், ஜீவசமாதிகள் தரிசனம்
ஒரு நாள் ஆன்மீக சுற்றுலாக்கள்.
ரூ.900/- மட்டுமே.
(காபி, டிபன், மதிய உணவு, மாலை தேனீர் உட்பட)

மந்திராலயம், நவபிருந்தாவனம் / ஷீரடி,
சனி சிங்கனாப்பூர் (ரயில் மற்றும் விமானம்)

**Shirdi by Air : Rs10,500/- Only!**

# SHIVSAI TOURS



# 988 42 43 095

**Cell : 99404 47 437 (8 to 10pm only)**

எமது அடுத்தடுத்த சுற்றுலாக்களைப் பற்றி அறிந்து கொள்ள

www.aanmeegaula.blogspot.in, www.chennaisidhargal.blogspot.in,
www.songsbyshanks.blogspot.in Email : madambakkamshanks@yahoo.com
Facebook : Madambakkam Shankar

**மாதந்தோறும்** - ஸ்ரார்த்த ஏற்பாடுகளுடன் காசி ராமேஸ்வரம் யாத்திரை - திரிவேணி, கயா, காசி (3 நாட்கள் தங்குதல்), ராமேஸ்வரம், உணவு, தங்குமிடம் உட்பட **ரூ.8,500/-** மட்டுமே. **பித்ரு காரிய காசி ராமேஸ்வர யாத்திரை** செல்ல உடன் அணுகவும் : **98840 68001.**





பாதக மலங்களை போக்கும்
பாத கமலங்களை பணிவோம்

# சங்கரானந்தம்-18

## 13.06.2022




